# குத்தகை ஆவணம்

________ம் வருடம் ___________மாதம் ___ம் நாள்

__________________________________________ என்ற முகவரியில் வசிக்கும் திரு____________அவர்களின் குமாரர் சுமார் __ வயதுள்ள திரு.________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) [இதுமுதற்கொண்டு இவர் (குத்தகை விடுபவர்) முதல் பார்ட்டியாகவும்]

_______________________________________ என்ற முகவரியில் வசிக்கும் திரு.______________________ அவர்களின் குமாரர் சுமார் ____வயதுள்ள திரு._____________ (அடையாள அட்டை _____) (கைபேசி எண்._____) [இதுமுதற்கொண்டு இவர் (குத்கை எடுப்பவர்) இரண்டாவது பார்ட்டியாகவும்] சேர்ந்து சம்மதித்து எழுதிக் கொள்ளும் குத்தகை ஆவணம் என்னவென்றால்.

குத்தகை விடுபவர் மற்றும் குத்தகை எடுப்பவர் சொற்றொடர்கள், மேற்படி நபர்களையும் மற்றும் அவரவர்களுடைய வாரிசுதாரர்களையும், முகவர்களையும் பிரதிகளையும், நிறைவேற்றுபவர்களையும் குறிக்கும்.

____________________________________ என்ற விலாசத்தில் அமைந்துள்ள வீடானது நம்மில் குத்தகை விடுபவருக்கு _________ சார்பதிவக 1 புத்தக ஆவண எண்.____/____ன்படி சொந்தமானதாகும்.

மேற்படி விலாசத்தில் முதல் தளத்தில் குடியிருப்பு உபயோகத்திற்கு, நம்மில் இரண்டாவது பார்ட்டி, முதலாவது பார்ட்டியை அணுகி போர்ஷனை குத்தகைக்கு விட கேட்டதின் பெயரில் முதலாவது பார்ட்டியும், ஷெட்யூலில் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ள போர்ஷனை ரூ.__________ (ரூபாய் _________________ மட்டும்) குத்தகைக்க விட சம்மதித்தின் பேரில் முதல் மற்றும் இரண்டாவது பார்ட்டியும் கீழ்க்கண்ட ஷரத்துக்களின் அடிப்படையில் இந்த குத்தகை ஒப்பந்தப் பத்திரத்தினை எழுதிக் கொள்கிறார்கள்.

## <u>இந்த குத்தகை ஒப்பந்தப் பத்திரத்தின் முக்கிய ஷரத்துக்கள்</u>

1). ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள போர்ஷனை முலாவது பார்ட்டி, இரண்டாவது பார்ட்டிக்கு ________ தேதி முதல் குத்தகைக்கு விட சம்மதிக்கிறார். இரண்டாவது பார்ட்டி போர்ஷனை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள சம்மதிக்கிறார்.

2). இந்த குத்தகை ஒப்பந்தப் பத்திரத்தின் காலக்கெடு, இன்றைய தேதியிலிருந்து ______ வருட காலமாகும். அதாவது ________ தேதி முதல் _______________ தேதி வரை அமுலில் இருக்கும்.

3). ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள போர்ஷனுக்கு குத்தகை முன்பணம் ரூ.__________ (ரூபாய் ________________ மட்டும்) ஆகும். இந்த முன்பணம் ரூ.________/- முழுவதும் இன்றைய தேதியில் முதல் பார்ட்டி இரண்டாவது பார்ட்டியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். இந்த முன்பணத்தை ஒன்றாவது பார்ட்டி குத்தகை காலம் முடியும் போது இரண்டாவது பார்ட்டி போர்ஷனை காலி செய்து கொடுக்கும் போது திரும்ப கொடுப்பதாக ஒன்றாவது பார்ட்டி உறுதி கூறுகிறார்.

4). இந்த குத்தகைக்கான மாத வாடகை ரூ.__________ (ரூபாய் ________________ மட்டும்) ஆகும்.

5). ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள போர்ஷனுக்கு உரிய சொத்து வரி, மாநகராட்சி வரி போன்றவற்றை முதலாவது பார்ட்டியே செலுத்த வேண்டும்.

6). ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள மேற்படி போர்ஷன் நம்மில் முதலாவது பார்ட்டிக்கு தேவைப்பட்டாலும் அல்லது இரண்டாவது பார்ட்டிக்கு தேவையில்லாவிட்டாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் _______ மாத கால நோட்டீஸ் கொடுத்து போர்ஷனை காலி செய்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

7). இந்த ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள போர்ஷனை நம்மில் இரண்டாவது பார்ட்டி தூய்மையாகவும் சுத்தமாகவும் வைத்திருக்க வேண்டும்.

8). முதலாவது பார்ட்டி போர்ஷனை எந்த நிலையில் இரண்டாவது பார்ட்டிக்கு கொடுகிறாரோ அதே நிலையில் குத்தகை காலம் முடியும் போது இரண்டாவது பார்ட்டி ஒப்படைக்க வேண்டும். ஏதாவது பழுது ஏற்பட்டிருப்பின் அதன் செலவுகளை இரண்டாவது பார்ட்டியையே சாரும்.

9). இந்த ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள போர்ஷனை நம்மில் ஒன்றாவது பார்ட்டியோ அல்லது ஒன்றாவது பார்ட்டியின் அனுமதி பெற்ற நபரோ போர்ஷனை பார்வையிட வேண்டும் என்றால் இரண்டாவது பார்ட்டி அனுமதி அளிக்க வேண்டும்.

10). இந்த ஷெட்யூலில் குறிபிட்டுள்ள போர்ஷனில் நம்மில் இரண்டாவது பார்ட்டி குடியிருப்பு உபயோகத்திற்கு மட்டும் தான் பயன்படுத்த வேண்டும். வேறு எந்தவிதமான உபயோகத்திற்கும் பயன்படுத்தக் கூடாது.

11). இந்த ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள குத்தகை போர்ஷனுக்கு உரிய மின்சார கட்டணத்தை இரண்டாவது பார்ட்டி நேரடியாக மின்சார வாரியத்தில் செலுத்திக் கொள்ள வேண்டியது.

12). இந்த மேற்படி இடத்தில் உள்ள போர்ஷனில் சட்ட விரோத செயல்களைச் செய்வதற்கு பயன்படுத்தக் கூடாது.

## <u>சொத்து விவரம்</u>

இந்தப்படிக்கு நாம் இருபார்ட்டிகளும் அடியிற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் மனப்பூர்வமாய் சம்மதித்து எழுதிக் கொள்ளும் குத்தகை ஆவணம்.

**சாட்சிகள்**

1.

2.